Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 331

செவ்வாய்க்கிழமை
22 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"இது அறிக்கையில்லை உண்மையில அநுர தரப்புக்கு ஒரு ஆப்பு"



# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை வெளியிட்டார் உதய கம்மன்பில

## ஒக்ரோபர் 28ஆம் திகதி இரண்டாம் அறிக்கை ஊடக சந்திப்பில் வைத்து அவரே தெரிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 22

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டு அறிக்கைகளில் ஒன்றை பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில நேற்று வெளியிட்டுள்ளார்.

09



ஊழல் குற்றச்சாட்டு:

## 67 பேர் கைது

கொழும்பு, ஒக். 22

கடந்த ஒன்பது மாதங்களில் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் 67 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலஞ்சம் கொடுக்கும் போதும்,

11

## ஈஸ்டர் தாக்குதல்களுக்கு ரவி செனவிரத்னவே காரணம்

### கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 22

ஈஸ்டர் தாக்குதல்கள் இடம்பெற்றபோது குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூத்த பிரதி பொலிஸ்மா அதிபராகச் செயற்பட்ட செனவிரத்ன நினைத்திருந்தால், தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம் என்று

11

## உண்மைக் குற்றவாளிகளை பாதுகாக்கின்றார் கம்மன்பில

### அதற்காகவே இந்த நாடகம் ஜனாதிபதி அநுர பதிலடி



கொழும்பு, ஒக். 22

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் கூறிக்கொண்டிருக்கும் நபர், தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய உண்மைக் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்காக அவர்களின் ஒப்பந்தத்தின்படி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்று ஜனாதிபதி

11

## அநுர அரசிடம் தெளிவில்லை!

### சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக்ரோபர் 22

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு தொடர்பில் அநுர அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் ஜனாதிபதி ரணிலின் ஆலோசகருமாக சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

11

## நாடாளுமன்றத் தேர்தல்; அலுவலர்களுக்கு விளக்கமளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டு விநியோக்கும் அலுவலர்களுக்கான செயலமர்வு நேற்றுத் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

11

## அநுரவுக்கு எதிராக குற்றப் பிரேரணை!

விரிவு :- பக். 09

## தேர்தல் திகதி அறிவிப்பு அரசமைப்புக்கு முரணானது!

### நீதிமன்றில் மனுத்தாக்கல்

கொழும்பு, ஒக். 22

நாடாளுமன்றத் தேர்தலை நவம்பர் 14ஆம் திகதி நடத்துவது அரசமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல்

11

### இந்திய இராணுவத்தின் வெறியாட்டத்தால் நிகழ்ந்த

## யாழ். போதனா படுகொலைகள்; நினைவேந்தல் உணர்வுபூர்வம்!

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி உள்நுழைந்து இந்திய இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 68 பேரின், 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவிடத்தில், மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவகலாநிதி

11



### மாடுகளைத் திருடி

## இறைச்சியாக்கியோர் முல்லையில் கைது

முல்லைத்தீவு, ஒக். 22

புதுக்குடியிருப்பு, உடையார்கட்டில் நீண்ட நாட்களாக மக்களின் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட பசுமாடுகளை திருடி இறச்சிக்காக விற்பனை செய்துவந்த

11

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநபர் ஆதிக்கத்தாலேயே தமிழரசுக்கட்சி அழிந்தது

## கே.வி.தவராசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.22
நாங்கள் விரும்பிக் கட்சியைவிட்டு வெளியேறவில்லை. ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு என்னும் பெயரில் கட்சியை உருவாக்கி வாக்குக் கேட்டுவர வேண்டிய சூழ்நிலையை இலங்கைத் தமிழரசுக் கட்சியே ஏற்படுத்தியுள்ளது.

-இவ்வாறு ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேசசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

16 ஆண்டுகள் தமிழரசுக்கட்சியின் உள்ளே இருந்தேன். கட்சியின் மத்தியகுழு, அரசியல்குழு மற்றும் சட்டக் குழு எனப் பல குழுக்களில் இருந்தேன். அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரது வழக்குகளில் இருந்து இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட, அரசியல் கைதிகளின் வழக்குகளில் நான் முன்னிலையாகியிருக்கின்றேன்.

இப்போது இலங்கைத் தமிழரசுக்கட்சி தனி நபரின் கம்பனியாக மாறியிருக்கின்றது. கட்சிக்குள் இருந்த அனைவரையும் விலக்கிவிட்டு தனது தனியான கட்டுக்கோப்புக்குள் கட்சியை வைத்திருக்கின்றார்.

தமிழ்த்தேசியம் தான் எமது தமிழரசுக்கட்சியின் தாரக மந்திரம். தமிழ்த் தேசியமானது பாதுகாக்கப்படவேண்டும். நாங்கள் இல்லாவிட்டாலும் கூட அடுத்த தலைமுறையிடம் அதை ஒப்படைத்து விட்டுச் செல்லவேண்டும். ஆனால் தமிழரசுக் கட்சிக்குள் அது நடைபெறவில்லை. அங்கு சர்வாதிகாரப் போக்கே நடக்கின்றது-என்றார். (எ-27)

# நாடாளுமன்ற அமர்வில் 225 எம்.பி.க்கள் சந்தேகம்

கொழும்பு, ஒக். 22

**நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் நவம்பர் மாதம் 21ஆம் திகதி கூடவுள்ள முதல் நாடாளுமன்ற அமர்வில் பெரும்பாலும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருக்கமாட்டார்கள் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

நவம்பர் மாதம் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத்தேர்தலின் முடிவுகளை 18ஆம் திகதி வெளியிட்டு நிறைவு செய்யமுடியும். 196 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை அறிவிக்கமுடியும். அவற்றிலிருந்து தெரிவுசெய்து, தேசியப் பட்டியலில் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பெயர்ப் பட்டியலை கட்சி செயலாளர்களால் உடனடியாக வழங்கமுடியுமா என்பது கேள்விக்குறியே. தேர்தலை நடத்தி மிகக் குறுகிய காலப்பகுதியில் தேசியப் பட்டியலின் பெயர்ப் பட்டியலை வழங்கமுடியும் எனில் 225 பேர் கொண்ட நாடாளுமன்றத்தைக் கூட்டமுடியும். அவ்வாறு இல்லையெனில், நாடாளுமன்றத்தை கூட்ட அவசியமான உறுப்பினர்களுடன் நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# சுனாமி உதவிகளைத் தடுக்க போராட்டம் நடத்திய ஜே.வி.பி.

## சாடுகின்றார் சிவாஜி

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை கிடைக்கக்கூடாது என்பதற்காகக் கொழும்பை முடக்கிப் போராட்டம் நடத்தியவர்கள்தான் மக்கள் விடுதலை முன்னணியினர் என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மாற்றம் வரும் என்று நம்பியவர்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா 'தமிழர்களுக்கு பிரச்சினை இல்லை, பொருளாதாரப் பிரச்சினை மட்டுமே இருக்கின்றது 'என்று கூறியிருக்கின்றார். அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உள்ளக விசாரணை மட்டுமே நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணி இன்னமும் இனவாதத்தில் இருந்து மீளவில்லை. மக்கள் விடுதலை முன்னணி எனப்படும் ஜே.வி.பி.க்கு வாக்களித்தால் தமிழ் மக்களை அது அதலபாதாளத்தில் கொண்டுசென்றுவிடும் - என்றார். (எ-27)

# பலமான எதிர்க்கட்சி சிலிண்டர்

## சந்திரசேன

கொழும்பு, ஒக்.22
பொதுத்தேர்தல் ஊடாக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றோம். அவ்வாறு இல்லாவிட்டால் பலமான எதிர்க்கட்சியாக செயற்படுவோம் என்று சிலிண்டர் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எமது கூட்டணியில் ரணில் விக்கிரமசிங்க, தினேஷ் குணவர்த்தன, நிமால் சிறிபாலடி சில்வாபோன்ற சிரேஷ்டதலைவர்கள் உள்ளனர். அவர்கள் கூட்டணியை வெற்றிகரமாக வழிநடத்துவார்கள்.

சிறந்த மாவட்ட தலைவர்களும் உள்ளனர். பொதுத்தேர்தலின் ஊடாக ஆட்சியமைக்க முயற்சித்து வருகின்றோம். அதற்குரிய ஆணை கிடைக்காவிட்டால் பிரதான எதிர்க்கட்சியாக செயற்படுவோம். அதற்குரிய ஆணையை மக்கள் எமக்கே வழங்குவார்கள் என்ற உறுதியான நம்பிக்கை உள்ளது-என்றார். (எ-44)

# இருப்பைப் பாதுகாக்காது தேசியம் சாத்தியமாகாது

## அங்கஜன் தெரிவிப்பு

தமிழர்களின் இருப்பைப் பாதுகாக்காமல் தமிழ்த் தேசியம் சாத்தியமடையாது என ஜனநாயக தேசியக்கூட்டணியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். காங்கேசன்துறையில் நடத்திய தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்காலத்துக்கு தேவையான தமிழ்த் தேசியவாதியாக நான் சிந்திக்கிறேன். தமிழர்களின் இருப்பை பாதுகாக்காமல் தமிழ்த் தேசியம் சாத்தியமடையாது. 9 இல் இருந்து 6 ஆக எங்களது பிரதிநிதித்துவத்தை வீழ்ச்சியடையச் செய்ததுதான் தமிழ்த்தேசியவாதிகள் எனச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் செய்த சாதனை. மக்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து அவர்களின் பொருளாதார ரீதியிலான முன்னேற்றத்தை நோக்கியதாகவே எனது அரசியல் பயணம் உள்ளது. அதுவே தமிழர்களின் இருப்பை உறுதிசெய்யும்-என்றார். (எ-இ)

# தமிழருக்கான தீர்வைப் பெறும் ஆற்றல் தமிழரசுக் கட்சிக்கே!

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து ஓரணியாக நாடாளுமன்றத்துக்குச் செல்லும் சக்தி இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மட்டுமே உள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை தொடர்பான தீர்வுகளை எட்டுவதற்கு இலங்கை தமிழரசுக் கட்சிக்குத்தான் ஆற்றலும் வலிமையும் இருக்கிறது என்பதால் தமிழ் மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்கவேண்டும்.

நெல்லியடியில் நேற்றுமுன்தினம் இரவு நடத்திய பரப்புரைக்கூட்டத்தில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் -இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது 3 பிரதான வேட்பாளர்களுடனும் பேச்சு நடத்தியிருந்தோம். ஒரு தரப்பு வெற்றியடையும்போது, தோல்வியடையும் இரு தரப்புகள் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடாது என்பதாலேயே அனைவருடனும் பேச்சு நடத்தியிருந்தோம்.

அந்த வாக்குறுதிகளை தமிழரசுக்கட்சி மாத்திரமே பெற்றுள்ளது. ஆகவே அந்த விடயங்களை செய்வதாக இருந்தால் நாங்கள்தான் செய்யலாம் - என்றார். (எ-100)

# வரி நிவாரணம் கிடைக்க நாடாளுமன்ற அதிகாரம்!

## மக்களிடம் கோருகிறார் சஜித்



வரி நிவாரணத்தை மக்களுக்கு வழங்குவதற்கு நாடாளுமன்ற அதிகாரத்தை மக்கள் வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவிசாவளையில் நடத்திய மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

சர்வதேச நாணயநிதியத்துடன் கலந்துரையாடி நாட்டுக்கு வரி அழுத்தமில்லா நிவாரணத்தை வழங்கத் திட்டமிட்டிருந்தோம். ஆயினும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஆணை கிடைக்கவில்லை. தற்போதுகூடப் பொதுமக்களுக்கு வாய்ப்பு உள்ளது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை ஐக்கிய மக்கள் சக்திக்கு அல்லது கூட்டணிக்கு வழங்குவதன் ஊடாக எம்மால் நாணயநிதியத்துடன் கலந்துரையாட முடியும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழ்த்தேசிய நீக்கத்தாலேயே தமிழரசுக்கட்சி பிளவடைந்தது

## ஈ.சரவணபவன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஒக். 22**

**இலங்கைத்தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு ஒவ்வாதவையாகவே இருக்கின்றன. தமிழ்த்தேசியத்தின் பாதையில் இருந்து இலங்கைத் தமிழரசுக்கட்சி விலகிச் சென்றுவிட்டது. அதனோலேயே கட்சியில் இருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானோம் - இவ்வாறு ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பின் வேட்பாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**

வலிகாமம் மேற்குப் பிரதேசசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழ்த்தேசியத்தை தெற்குடன் கலந்து காணாமல் செய்துவிடவேண்டும் என்ற நோக்கத்துடனேயே எம்.ஏ.சுமந்திரன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். அதனாலேயே இலங்கைத்தமிழரசுக் கட்சியில் இருந்து தமிழ்த்தேசிய ஆதரவாளர்கள் ஒவ்வொருவராக அவரால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியில் உள்ளவர்களின் தமிழ்த்தேசியத்துக்கு எதிரான செயற்பாடுகளால் கட்சியில் இருந்து வெளியேறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாகத் தீர்மானித்தது. 41 பேர் உள்ள மத்திய குழுவில் வெறுமனே 26 பேர் சேர்ந்து இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தனர். அந்தத் தீர்மானத்தை மீறியதாக எனக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும் விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பியுள்ளனர். தேர்தலில் வென்றாலும் கட்சியின் தீர்மானத்தை மீறினார் என்று சி.சிறீதரன் மீது நடவடிக்கை எடுக்கப்படலாம். அவரின் நாடாளுமன்றப் பதவி வெறிதாக்கப்படலாம்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வேட்பாளர் தெரிவுப் பட்டியலில் 17 பேர் இருந்தார்கள். எம்.ஏ.சுமந்திரனும், கட்சியின் செயலாளர் சத்தியலிங்கமும் இணைந்து தங்களுக்குச் சாதகமற்றவர்களை நீக்கினார்கள். சுமந்திரனுக்கு ஆதரவானவர்கள் வேட்பாளர் தெரிவில் உள்வாங்கப்பட்டனர். தன்னால் நியமிக்கப்பட்டவர்களின் ஊடாக விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவே எம்.ஏ.சுமந்திரன் திட்டமிடுகின்றார். ஆனால் மக்களிடம் அறிமுகமற்ற வேட்பாளர்களால் எதையும் சாதித்துவிட முடியாது-என்றார். (எ-27)

# மாற்றம் என்று கூறிக்கொண்டு தமிழ்த்தேசியத்தை விடமுடியாது

## தமிழ் மக்கள் கூட்டணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

மாற்றம் என்று கூறிச் சிங்களத் தேசியத்திடம் தமிழ்த் தேசியத்தை அடமானம் வைக்கமுடியாது என்று தமிழ் மக்கள் கூட்டணியில் மான் சின்னத்தில் போட்டியிடும் தவச்செல்வம் சிற்பரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் தெற்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் தாக்கம் தமிழர் மத்தியிலும் உண்டு. ஊழலற்ற சமூகத்தை உருவாக்கவேண்டும் என்ற அவா இருக்கின்றது. அதற்காக தமிழ்த்தேசியத்தை சிங்கள தேசியத்துக்கு அடமானம் வைக்க முடியாது. மக்களுக்கு மாற்றம் தேவை பழையவர்கள் வேண்டாம் என நினைக்கிறார்கள். இந்தத் தேர்தலில் போட்டியிடும் இளைய ஆளுமைமிக்க எமது அணிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்-என்றார். (எ-20)

# தேர்தலின் பின்னரும் பிரதமர் ஹரிணியே

பொதுத்தேர்தலின் பின்னர் அமையும் புதிய அரசாங்கத்தில் பிரதமர் பதவியில் மாற்றம் வராது என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். 25 பேரடங்கிய புதிய அமைச்சரவையில் பிரதமர் பதவி கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கே வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதியொருவருக்கு சட்டரீதியாக கிடைக்கவேண்டிய விடயங்கள் வழங்கப்படும் எனவும், அதற்கு மேலதிகமாக எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (எ-44)

# விருப்பு வாக்கு வேண்டாம் கட்சிக்கே வாக்களியுங்கள்

## தேசிய மக்கள் சக்தி பரப்புரை

கொழும்பு, ஒக்.22

விருப்பு வாக்குக்கு முன்னுரிமை அளிக்காமல் கட்சிக்கு வாக்களியுங்கள் என தேசிய மக்கள் சக்தி பரப்புரை மேற்கொண்டு வருகின்றது.

அடுத்த மாதம் 14ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தென்னிலங்கையில் முதலாவது பரப்புரை ஊர்வலத்தை தேசிய மக்கள் சக்தி ஆரம்பித்துள்ளது. ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் விருப்பு வாக்குகளை கை விட்டு கட்சிச் சின்னமான திசைகாட்டிக்கு வாக்களியுங்கள் என ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் வலியுறுத்தப்பட்டுள்ளனர். தேசிய மக்கள் சக்தி தென்னிலங்கையில் ஆங்காங்கே சிறு கூட்டங்களையும் நடத்தி வருகிறது. வீடு, வீடாகப் பரப்புரையையும் ஆரம்பித்துள்ளது. இந்த பிரசாரங்களின் போதும் விருப்பு வாக்குகளை கை விட்டு கட்சிச் சின்னமான திசைகாட்டிக்கு வாக்களியுங்கள் என தேசிய மக்கள் சக்தி வலியுறுத்தி வருகிறது. (எ-6)

# மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதே எம் இலக்கு

## ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

தமிழர்களே தமிழர்களின் கடலை ஆழவேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதே எமது நோக்கம்.

-இவ்வாறு ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு மாகாணத்தில் உள்ள கடற்றொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து, கடல்உரிமையை இழந்திருக்கின்றார்கள். இந்திய இழுவைப் படகுகளால் அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நடவடிக்கை எடுப்பதுடன், இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க நடவடிக்கை எடுப்போம் - என்றார். (எ-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளிமண்டலத் திணைக்களம் வளப்பற்றாக்குறையில்

## தேசிய கணக்காய்வு அலுவலகம் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.22
வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஒழுங்கற்ற வேலைத்திட்டம் காரணமாகவே, முன்னறிவிப்புகள் மற்றும் கணிப்புகளின் துல்லியத்தை பராமரிக்கமுடியாத நிலையேற்பட்டுள்ளது என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

உலகில் வானிலை முன்னறிவிப்புகளின் துல்லியத்தை பராமரிக்க அதிநவீன உபகரணங்கள் இன்றியமையாதவை, ஆனால் இந்த நாட்டின் வளிமண்டலவியல் திணைக்களம் அத்தகைய கருவிகளைக் கொண்டிருக்கவில்லை. வளிமண்டலவியல் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள 122 தானியங்கி மழைமானிகளில் 70 மழைமானிகள் மாத்திரமே 2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரை செயற்படுகின்றன.

அதன்படி கடந்த ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி வரை சுமார் 52 மழை மானிகள் செயற்படாமல் இருந்த நிலையில் 36 மழை மானிகள் மட்டுமே பராமரிக்கப்பட்டு வந்தன. நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள 453 வழக்கமான மழை மானிகளில் 44 தொடர்ச்சியாக தரவுகளை வழங்குவதில்லை. என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கசிப்புடன் ஒருவர் கைது

ஊரெழு அம்மன் கோவிலுக்கு அருகில் வீடொன்றில் கசிப்பு விற்பனையில் நபர் ஒருவர் ஈடுபடுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 10 லீற்றர் கசிப்பை மீட்டதுடன், அதை விற்பனை செய்ய வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் கோப்பாய் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ-25,20)

## நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.22
சுவீடன் நாட்டின் கோதம்பேரக் பல்கலைக்கழகத்திலே கல்வியாளராகப் பணிபுரியும் பேராசிரியர் பார்ட்க்லெம்மால் எழுதப்பட்ட 'இறைமை பற்றிய அபிலாஷைகளை நிகழ்த்திக் காட்டுதல்: இலங்கையிலே தமிழர்களின் ஆயுதப் போராட்டமும் போருக்குப் பிந்தைய நிலைமாற்றமும்' என்ற நூல் பற்றிய அறிமுக நிகழ்வு யாழ். பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கிலே நாளை புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. மொழியியல் ஆங்கிலத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வில் நூலாசிரியர் பார்ட்க்லெம் நூல் பற்றிய தனது அறிமுக உரையை நிகழ்த்துவார். சட்டத்தரணியும், யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையின் முன்னாள் தலைவருமான கலாநிதி குமாரவடிவேல் குருபரனும், சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமரும் நூல் பற்றிய தமது கருத்துரைகளை வழங்குவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## கிளிநொச்சியில் விபத்து இரு இளைஞர்கள் காயம்

கிளிநொச்சி, ஒக்.22
கிளிநொச்சி ஏ-9 வீதி மத்திய ஆரம்ப வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்றுத்திங்கட்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியைக் கடக்க முயன்ற துவிச்சக்கர வண்டி மீது மோதியதில் இந்த விபத்து நடந்துள்ளது. காயமடைந்த இளைஞர்கள் இருவரும் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-25,113)



## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ். ஊரெழு கணேச வித்தியாலய பரிசளிப்பு விழா அதிபர் இ.ஜெயக்குமார் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தின் தலைவர் ஆ.ரவீந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், பழைய மாணவர் து.ஜெயதேவன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஊரெழு முன்பள்ளிகளின் ஆசிரியைகளான திருமதிகள் மரிகா சசிகாந்தன், சுபாசினி அகிலன், சந்திரிக்கா துஷ்யந்தன், கௌசலா விக்னேஸ்வரன், சுதர்ஜனா அன்ரனி ஜோர்ஜ், செல்வி க.சுஜந்தா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-25)

## போதைப் பொருள்களுடன் 31 இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஒக்.22
நுவரெலியாவில் உள்ள அரச உல்லாச விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்தொன்றில் பல்வேறு போதைப் பொருள்களைக் கொண்டு வந்த 31 இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக நுவரெலியா தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.
முகநூல் விருந்தில் நாடளாவிய ரீதியில் இளைஞர்கள் பங்குபற்றவுள்ளதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் 8 பொலிஸ் குழுக்கள் மேற்கொண்ட சோதனையில் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பொறுமை அவசியம். பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவும். வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முடிவு செலவுகள் அதிகரிக்கும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பிள்ளைகளால் சங்கடங்கள் ஏற்படும். காரியங்கள் சாதகமாக முடியும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையற்ற செலவுகளும் ஏற்படும். கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். செலவுகள் ஏற்படும். அலைச்சல் ஏற்படும். செலவுகளால் சஞ்சலம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். நல்ல செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். மகிழ்ச்சியுடன் ஆதாயமும் உண்டாகும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**தனுசு:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். சுபச்செய்தி வரும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்னைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவுமிருக்காது.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வெளியூர்ப் பயணம் தவிர்ப்பது நல்லது. சுபச்செலவுகள் ஏற்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். உடல்நலனில் கவனம் தேவை. விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும். ஆதாயம் உண்டாகும். நன்மைகள் அதிகரிக்கும். பிரச்சினை ஏற்படும்.

**மீனம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். முருகப்பெருமானை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

# கட்டாக்காலி நாய்களால் விபத்துகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22
கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் கட்டாக்காலியாக நடமாடும் தெரு நாய்களால் வீதி விபத்துகள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
நாய் குறுக்கே ஓடியதால் இந்தப்பகுதியில் கடந்த மூன்று நாள்களில் மூன்று பேர் விபத்துக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றுத் திங்கட்கிழமை பருத்தித்துறைவிதி, கோப்பாய் பூதர்மடத்துக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் நாய் குறுக்கே ஓடியதால் நிலைதடுமாறி நாயுடன் மோதி கீழே வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளார்.
தெரு நாய்களைக் கட்டுப்படுத்த வலி. கிழக்குப் பிரதேசசபை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-25,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புதிய புள்ளியின் தேவை

உள்ளூராட்சித் தேர்தலுக்கு புதிய வேட்பு மனுக்கள் கோரப்பட மாட்டாது என்றும், ஏற்கனவே கோரப்பட்ட வேட்புமனுக்களின் பிரகாரமே தேர்தல் நடத்தப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அறிவித்திருக்கின்றார். நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அனேகமாக 2025ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறலாம் என்று கருதப்படும் நிலையிலேயே, புதிய வேட்புமனுக்கள் கோரப்படாது என்ற அறிவிப்பு தேர்தல்கள் திணைக்களத்தால் விடுக்கப்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதி குறிக்கப்பட்டு வேட்புமனுக்கள் கோரப்பட்டமையும் பின்னர் அது கைவிடப்பட்டமையும் ஓரிரு மாதங்களுக்கு முன்னர் நடந்தேறிய விடயங்கள் அல்ல. 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. 2025ஆம் ஆண்டு ஜனவரியில் தேர்தல் இடம்பெறுவதாக வைத்துக்கொண்டாலும், இடைப்பட்ட இரண்டு வருடங்கள் என்பது தேர்தல் அரசியலில் மிகப்பெரும் காலம். இந்த இரண்டு வருடங்களில் ஏகப்பட்ட மாற்றங்கள் இலங்கையின் அரசியல் களத்திலும் அதற்கு அப்பாலும் நிகழ்ந்திருக்கின்றன. அன்று வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த சுயேச்சைகள் இன்று அரசியல் கட்சிகளுடன் சங்கமித்திருக்கின்றனர். அன்று அரசியல் கட்சிகளில் இருந்தவர்கள் இன்று சுயேச்சைகளாக மாறியிருக்கின்றனர். இன்னும் பலர் வேறு கட்சிகளுடன் தம் அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளனர். வேறுசிலர் அரசியலில் இருந்து விடைபெற்றுள்ளனர். சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். குறிப்பிட்ட சிலர் உயிரிழந்திருக்கின்றனர். இவ்வாறிருக்கையில், ஏற்கனவே கோரப்பட்ட வேட்புமனுக்களின் அடிப்படையில் தேர்தலை நடத்துவது என்பது எவ்வாறு? எந்த அடிப்படையில் அது சரியாக அமையும்?

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த அரசியல் செல்நெறி இப்போதில்லை. தற்போதைய அரசியல் சூழமைவு மிகையாக மாற்றம் பெற்றிருக்கின்றது. இவ்வாறிருக்கையில், வேட்புமனுக்களை புதிதாகக் கோரி, அதற்கேற்ப தேர்தலை நடத்துவதுதான் செய்யத்தகுந்த செயலும் யாதார்த்தமுமாகும். அதைவிடுத்து, நேரகாலம் பாராது உள்ளூராட்சித் தேர்தலை அறிவித்த தவறையும், அறிவித்த உள்ளூராட்சித் தேர்தலை நடைமுறைப்படுத்த முடியாத தவறையும் சரிசெய்வதற்காக, விட்ட புள்ளியில் இருந்து ஆரம்பிப்பதானது இன்னுமின்னும் பாரதூரமான தவறுகளும், யதார்த்தப் பிறழ்வுகளும் ஏற்படுவதற்கே வழிகோலும். எனவே, தேர்தல்கள் திணைக்களம் இந்த விடயத்தை விவாதப் பொருளாக்கி இதைவைத்து காலத்தைக் கடத்திக் கொண்டிருக்காமல், உள்ளூராட்சித் தேர்தலை மிகவிரைவாகவும், வேட்பு மனுக்களை புதிதாய் கோருவதன் மூலமும் நடத்த முன்வரவேண்டும். ஒவ்வொரு வீட்டு வாசலுடன் தொடர்புடைய நிர்வாக அலகுகளை முடக்கி வைத்துக்கொண்டு, இதுபோன்ற விவாதப்புள்ளிகளைத் தோற்றுவித்துக் கொண்டிருப்பது ஆத்மார்த்தமான அரசியலுக்கு ஆகாது.



# அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் புதிய அபிவிருத்தித் திட்டங்கள்

## உலக வங்கி தெரிவிப்பு




கொழும்பு, ஒக்.22
அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் பல புதிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.
இந்த அபிவிருத்தித் திட்டங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது முதன்மையானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்காகத் தொடர்ந்தும் நிதியுதவி வழங்கத் தயார் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

# வழமைக்குத் திரும்பியது கடவுச்சீட்டு விநியோகம்

கொழும்பு, ஒக்.22
பெரும் சிக்கலாக மாறியிருந்த கடவுச்சீட்டு விநியோகம் நேற்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளது என்று அமைச்சர் விஜித ஹேறத் தெரிவித்துள்ளார்.
விண்ணப்பம் செய்யப்பட்ட புதிய வெளிநாட்டு கடவுச்சீட்டின் ஒரு தொகுதி நாட்டை வந்தடைந்துள்ளது. அதனால் கடவுச்சீட்டுக்கு நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை முடிவுக்கு வந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# அதிகரிக்கின்றது டெங்குத் தொற்று

கொழும்பு, ஒக்.22
நாட்டில் சீரற்ற கால நிலை நிலவிவரும் நிலையில், இந்த மாத தொடக்கத்திலிருந்து தற்போதுவரை ஆயிரத்து 874 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 41 ஆயிரத்து 285 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
அதேவேளை, வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன. (எ-இ)

# சலுகைகளை நீக்குவதற்கு காத்திருக்கும் அரசாங்கம்

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது பாரியார்களின் சலுகைகளைக் குறைப்பது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளுக்காக அரசாங்கம் காத்திருப்பதால் இன்னும் அது குறித்த தீர்மானம் எட்டப்படவில்லை என உயர்மட்ட வட்டாரம் ஒன்று தெரிவித்துள்ளது.
முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்கள் உயிருடன் இல்லாத பட்சத்தில் அவர்களின் மனைவிகள் ஜனாதிபதியின் உரிமைச் சட்டத்தின்படி வீடுகள், வாகனங்கள் மற்றும் ஓய்வூதியம் உள்ளிட்ட சலுகைகளுக்கு உரிமையுடையவர்கள். அத்தகைய சலுகைகளைக் குறைக்க அரசாங்கம் இப்போது முடிவு செய்துள்ள போதும், தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகள் அதற்குத் தடையாக உள்ளன.
சட்டம் திருத்தப்படுமா என்ற கேள்விக்கு, அது குழுவின் பரிந்துரைகளைப் பொறுத்தது என்று உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## நாளை

23.10.2024

புதன்கிழமை - ஐப்பசி - 06

சுபநேரம் : 04.32- 06.02

ராகுகாலம் : 12.02 - 01.32

## நாளொரு நல்வார்த்தை

ஈகையுள்ளம் கொண்டவனுக்கு தைரியம் அவசியமில்லை. ஏனெனில் தாராளம் என்ற கை, தைரியம் என்ற கையைவிட வலிமையானது.

- தாகூர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 06 . 1944



மறைவு 19 . 10 . 2024

## தியாகராஜா புஸ்பநாதன்

யாழ். ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், யாழ். சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா புஸ்பநாதன் (முன்னாள் வர்த்தகர்) அவர்கள் கடந்த 19.10.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - சரஸ்வதி தம்பதியரின் இளைய புத்திரரும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், பத்மாவதி (ஓய்வு பெற்ற ஆயுள்வேத வைத்தியர்) அவர்களின் ஆருயிர்க் கணவரும், ஜானகி, ஜனனி, ஜனகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மசிறி, வாகீசன், யாமினி ஆகியோரின் அன்பு மாமனாரும், யுவன், மகிஷா, விகாஷ், வைஸ்ணி, வருணீஸ், சாயீஷ், சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும், பரமநாதன், கயிலநாதன், காலஞ்சென்ற ஞானதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பத்மினிதேவி, சோமசுந்தரம் மற்றும் செல்வராணி, காலஞ்சென்றவர்களான தேவராஜா, மங்கையர்க்கரசி, மற்றும் சண்முகராஜா, கனகராஜா, பஞ்சாட்சரதேவி, ஆனந்தராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான அழகரட்ணம், மகேஸ்வரி, மற்றும் பழனிநாதன், சந்திரமணி, காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் ஸ்ரீநந்தினி ஆகியோரின் சம்பந்தியும், அகிலன், பகீரதி, கலைச்செல்வி, ஜங்கரன், அபிராமி, மயூரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சியாமினி, துஸ்யந்தினி, பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2024) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ், வண்ணார்பண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**39/4, வைரவர் ஒழுங்கை,
சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல் :
குடும்பத்தினர்
076 944 5640**

(CS/56508) J-1

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 10 • 05 • 1936



உதிர்வு 22 • 09 • 2024

**கடந்த 22.09.2024 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி**

## சுப்பையாபிள்ளை சரோஜினிதேவி

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.10.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது குடும்பத்தலைவியின் மரணச்செய்தி கேட்டு துயருற்ற வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல் ஆகியவையூடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையங்கள், பதாகைகள் வைத்தவர்களுக்கும், பத்திரிகையூடாக செய்தி வெளியிட்டவர்களுக்கும், இன்றுவரை சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செட்டிவளவு வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.**

(CS/56504) J-1

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 02 . 1948



இறப்பு 21 . 10 . 2024

## சீவரத்தினம் பொன்னம்மா (பூமணி)

காளிகோவிலடி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் பொன்னம்மா நேற்று (21.10.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரவாகு - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் சீவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம், பாக்கியம் ஆகியோரின் சகோதரியும், ஜனார்த்தனி, ஜீவந்தினி, ஜீவதாசன், கிரிதாசன் ஆகியோரின் தாயாரும், சுகுணதாசன், ஸ்ரீகிருஸ்ணமூர்த்தி, ராதிகா, தாரணி ஆகியோரின் மாமியாரும், விஸ்ணுசாந்தினி, கிருஸ்ணதாசன், குகதாசன், திரிசாந்தினி, கிருசாந்தி, பிரசாந்தி, வஜிகரன், தேனுயன், குகப்பிரியன், டிஷானா, சாரமுதன், திருமகள் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோவிலடி,
மல்லாகம்.**

(CS/56506) J-1

**தகவல் :
குடும்பத்தினர்**

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 12 . 01 . 1935



இறப்பு 21 . 10 . 2024

A.V.R.அறக்கட்டளை ஸ்தாபகர்

## புவனேஸ்வரி விசாகரத்தினம்

அவர்கள் நேற்று (21.10.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருத்துவர் விசாகரத்தினத்தின் அன்பு மனைவியும், அறக்கொடையாளரும் சமூக சேவகியுமான திருமதி விசாலினி சிவகுமாரின் அன்புத் தாயாரும், மனிதாபி மானியும் சமூக சேவையாளருமான பொன்னுத்துரை சிவகுமாரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2024) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பளை யில் (மகளின் இல்லத்தில்) இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொது அமைப்புக்கள் சார்பாக அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரானின் ஆசானான மௌலவி

## உதய கம்மன்பில கூறுகின்றார்

**கொழும்பு, ஒக்.22**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாக சஹ்ரானின் ஆசானாக இருந்த மௌலவி ஒருவரே என அடையாளம் காணப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லையென்று கூறுபவர்கள் உண்மையான சூத்திரதாரி பற்றிய தகவல்களை வெளியிடலாம் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய கம்மன்பில் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி சஹ்ரானின் ஆசானாக இருந்த மௌலவி ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று உறுதிப்படுத்திய பின்னரே அது தொடர்பான விசாரணைகளை அமெரிக்காவின் எப்.பி.ஐ. மற்றும் ஆஸ்திரேலிய பெடரல் பொலிஸாரும் முடிவுக்கு கொண்டு வந்தனர். பிரதான சூத்திரதாரியொருவர் இருக்கின்றார் எனக் கூறும் நபர்கள் அது தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு வழங்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் வெளிப்படுத்தவேண்டும். சிலவேளை ஜனாதிபதி குழுவொன்றை நியமித்தாவது கண்டறியலாம். நான் கோமாவில் இருந்து எழுந்து வந்து இந்த அறிக்கையை வெளியிடவில்லை. இதன் பின்னணியில் அரசியல் நோக்கமும் இல்லை. அறிக்கையின் இணைப்புகள், தேசியப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்கள்என்பதால் அவற்றை வெளியிட வேண்டாம் என ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளது. எனவே, அவற்றை நான் வெளியிடவில்லை - என்றார். (எ-44)

# நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி, பிரதமருடன் சந்திப்பு!

## வேடுவர் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.22

பொதுத்தேர்தல் முடிந்தவுடன் ஜனாதிபதியையும், பிரதமரையும் சந்திக்கவுள்ளதாக வேடர்களின் தலைவர் உருவருகே வன்னிலா அத்தோ தெரிவித்துள்ளார். தமக்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லையென தெரிவித்துள்ள வேடர்களின் தலைவர் காடுகள் அழிக்கப்படுவதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளார். காடுகள் தான் எமது வழிபாட்டிடங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள் என்று தெரிவித்துள்ள அவர், தமது(வேடுவ) சமூகத்தில் ஐந்து இலட்சம் பேர் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். (எ-6)

# துப்பாக்கி தயாரிக்கும் தொழிற்சாலை கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக்.22

சூரியவெவ, வெவேகம பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் துப்பாக்கி தயாரிக்கும் சிறிய தொழிற்சாலையை நடத்தி வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையின் அம்பாந்தோட்டை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் மக்களைக் குழப்ப முயற்சி

## மல்கம் ரஞ்சித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.22



2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பொதுமக்களை தவறாக வழிநடத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரசாங்கத்தை சேர்ந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், அதிகாரிகள் குழுவொன்று விசாரணைகள் தொடர்பில் குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றது என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னைய அரசாங்கத்தின் இரண்டு அறிக்கைகளில் ஒன்றில் உயிர்த்த ஞாயிறு குறித்த விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காணப்படுகின்றன.

புதிய அறிக்கைகளில் அரசாங்கத்தின் தற்போதைய அறிக்கைகள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னைய அரசாங்கம் இந்தப் பரிந்துரைகள் குறித்து அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

நாங்கள் இந்த இரண்டு அறிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை, தற்போதைய ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்துள்ளார்.

அவர் அதனை நிறைவேற்றுவாரா என கத்தோலிக்க திருச்சபை பார்த்துக்கொண்டிருக்கின்றது-என்றார். (எ-இ)

# மறைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மீட்பு!

கொழும்பு, ஒக்.22

முன்னாள் அமைச்சர் ரோகித அபய குணவர்த்தனவின் உறவினரின் வீட்டில் மறைத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு ஆடம்பர வாகனங்களை கண்டி குற்றத்தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

அனிவத்த பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 60 மில்லியன் ரூபா பெறுமதியான பி.எம்.டபிள்யூ. மற்றும் எஸ்.யு.வி. ரக வாகனங்களையே கண்டி குற்றத் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். வீட்டில் வாகனத்தரிப்பிடமொன்றை சோதனையிட்டவேளை இந்த வாகனங்களைக் கண்டுபிடித்துள்ளது என்றும், அந்த வாகனங்களுக்கு எவரும் உரிமை கோரவில்லை என்பதால் வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)



# தினம் தெரியுமோ?

சங்குப்பிட்டிப் பாலத்தைப் பற்றி கதைச்சு மாளாது போல. ஆனாலும் கதைச்சே ஆக வேனும். ஒரு பாலத்தை வைச்சு என்னென்ன கூத்துகள் நடக்குதெண்டு எங்கட சனத்துக்குத் தெரியத்தானே வேனும். சங்குப்பிட்டிப் பாலம் பழுதாப் போய்க்கொண்டிருக்கு எண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காரருக்கு முதலே தெரியுமாம்.அவை அதை மேலிடத்துக்கு ரிப்போர்ட் பண்ண, அவையும் பாலத்தை திருத்துறதுக்கு 'ரெண்டர் நோட்டீஸ்' விட்டிருக்கினம். அப்பிடி ரெண்டர் அனுப்பினவையில ஆர் ஆகலும் குறைவான தொகைக்கு செய்யலாம் எண்டு போட்டிருக்கினமோ, அவைக்குத்தான் அந்த ஒப்பந்தத்தை குடுக்கிறது. அதுதான் சட்டரீதியான முறையும் கூட.

ஆனால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின்ர கொழும்பு மேலிடம் என்ன செய்திருக்கெண்டால், எல்லாரைவிடவும் குறைவா ரெண்டர் போட்டவரை விட்டிட்டு, அவருக்கு அடுத்ததா இருந்தவருக்கு சங்குப்பிட்டிப் பாலத்தை திருத்திற ஒப்பந்தத்தைப் போட்டிட்டினம். அந்த ஒப்பந்தகாரரும் வேலை செய்யிற வாகனங்கள், கன்ரைனர் பெட்டியள் எண்டு பாலத்தடியில கொண்டந்து வேலையைத் தொடங்க ரெடி. ஆனால் அதுக்குள்ள அந்த ரெண்டரில ஆகலும் குறைவான தொகைக்கு இந்த வேலையைச் செய்துதாறன் எண்டு கேட்டவர், சட்டத்துக்கு மாறா தனக்கு அடுத்ததா உள்ளவருக்கு அந்த வேலையைக் குடுத்தது பிழை எண்டு கோர்ட்ஸில வழக்குப் போட்டிட்டார். அந்த வழக்கு நாலுமாசமா இழுபட்டதாலதான் பாலத்திருத்தவேலையும் இழுபட்டதாம். ஒழுங்குமுறைப்படி ரெண்டரை குடுத்திருந்தால் இப்பிடி நாலுமாசம் வீணாகி இருக்காதே. ஏதோ தங்கட பொக்கற்றை நிரப்பிறதுக்காக இப்பிடி ஒரு வேலையைச் செய்திருக்கினம் போல. அப்பிடி வழக்குப் போடாட்டியும் இப்பிடி மாரிமழைக்குள்ள வேலையை இழுத்தடிச்சு மண் கரைஞ்சு போட்டுது, கல்லுக் காணாமல் போட்டுது எண்டு பிலாக்கனம் பாடி, முதல் கேட்ட தொகையை விட கூட வாங்கிறது தானே ஒப்பந்தகாரரின்ர குணம்.

இப்ப சங்குப்பிட்டிப் பாலத்தின்ர திருத்த வேலைக்கு கிட்டத்தட்ட 80 கோடி ரூபாவுக்கும் மேல ஒதுக்கியிருக்குதாம். ஆனாலும் உந்தக் காசை வைச்சு பாலத்தை முழுசாத்திருத்தேலாது எண்டதால, முக்கியமான நட்டுகளை மாத்தி, கறளை இல்லாமலாக்கி, ஏதும் உடைசல்களை ஒட்டி தற்காலிகமா ஒரு செயற்கை சுவாசம் தான் குடுக்கலாமாம். முழுசா திருத்த காலமும், காசும் கனக்க தேவை எண்டதால இப்பிடி அப்பப்ப 'டச்சப்' வேலையளை மட்டும் செய்துகொண்டு காலத்தைக் கடத்தப்போயினம். நாங்களும் அதை வேடிக்கை பாக்கிறதை விட வேற என்னதான் செய்யமுடியும்?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா வடக்கு பிரதேச சபை
## 2025.01.01 முதல் 2025.12.31 வரை மரக்கறி சந்தைகள், மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2024.10.22 தொடக்கம் 2024.11.04 ஆம் திகதி பி.ப 1.50 வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2024.11.04 பிற்பகல் 02.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2024.11.04 பிற்பகல் 02.05 மணி

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. இல | சந்தை | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | நெடுங்கேணி கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 10,000.00 | 750,000.00 |
| 2 | கனகராயன்குளம் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 10,000.00 | 305,000.00 |
| 3 | புளியங்குளம் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 5,000.00 | 102,500.00 |
| 4 | நயினாமடு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 5,000.00 | 50,500.00 |
| 9 | நெடுங்கேணி மீன் சந்தை | 2,000.00 | 10,000.00 | 230,000.00 |
| 10 | கனகராயன்குளம் மீன் சந்தை | 2,000.00 | 10,000.00 | 230,000.00 |
| 11 | புளியங்குளம் மரக்கறி சந்தை | 2,000.00 | 5,000.00 | 150,000.00 |
| 12 | நயினாமடு மரக்கறி சந்தை | 2,000.00 | 5,000.00 | 40,000.00 |

கேள்வி நிபந்தனைகள்:

1. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி. இரண்டாம் பிரதி என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுவதோடு எதற்கான கேள்வி விண்ணப்பம் என்பதனையும் குறிப்பிட்டு "செயலாளர். வவுனியா வடக்கு பிரதேசசபை. நெடுங்கேணி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
2. கேள்விதாரர் இலங்கைப்பிரஜையாக இருக்கவேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் தெரியவரும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
4. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன். தாம் வதியும் இடத்தின் பிரதேச செயலரால் விநியோகிக்கப்பட்ட குடும்ப அட்டை மற்றும் அதன் பிரதி என்பனவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். மூலப்பிரதிகள் மீள ஒப்படைக்கப்படும்.
5. தெரிவு செய்யப்படும் கடைகள். சந்தைகளுக்கான சித்தி தரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பங்கு தொகையை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னதாக வைப்புத் தொகையாக செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 2/3 தொகையினை 2025.08.31 இற்கு முன்னர் மாதாந்தம் சம தொகைகளாக ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறுமிடத்து 10% தண்டப்பணம் அறவிடப்படும்.
6. தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேல் மாதாந்த குத்தகைத் தொகையினை செலுத்த தவறின் எதுவித அறிவித்தலும் இன்றி குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படுவதுடன் வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.
7. கேள்வி விண்ணப்பம் சமர்ப்பித்து சித்தி பெற்ற கேள்விதாரர் குறிக்கப்பட்ட கால அவகாசத்தினுள் ஒப்பந்தம் மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் அவரது கேள்வி விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும். அத்துடன் எதிர்காலத்தில் அவர் கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாதவாறு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுவார் என்பதோடு கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
8. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை எந்தவொரு காரணமும் காட்டாது ஏற்கவோ. நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
9. கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புபணமும் மீளளிக்கப்படமாட்டாது.
10. கேள்வி அறிவித்தலுக்கும். நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாகவும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது ஆகும். கேள்விப்படிவங்களை தருவதற்கு முன்பும் அதற்கு பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமாகும்.
11. மரக்கறிச்சந்தை மண்டபத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர். கொண்டுவரும் பொருட்களின் விற்பனைவிலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது அத்துடன் உற்பத்தியாளரிடமிருந்து 10% கழிவு பெறும் நடைமுறை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
12. சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற இறைச்சி. மீன் மற்றும் மரக்கறி போன்றன சுகாதாரமானதாக இருப்பதுடன் நியாயமான விலைக்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
13. குத்தகைதாரர் கடை. சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
14. சந்தைகளை குத்தகைக்கு பெறுபவர் வியாபாரிகள் கோருமிடத்து சந்தைப்பகுதியில் இடம் இருப்பின் நியாயமான வாடகைக்கு வழங்குதல் வேண்டும்
15. சந்தைச்சுற்றாடலில் இருந்து 0.5 Km (ஐநூறு மீற்றர்) சுற்றுவட்டாரத்தில் மரக்கறி. மீன். இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
16. உபகுத்தகைக்கு விடுவது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் குத்தகைக்கு எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு தெரியவரின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படும்.
17. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்துகளுக்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்துமூலம் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒழுகுதல் வேண்டும்.
18. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
19. கேள்வி விண்ணப்பங்களை உரிய நேரத்திற்கு முன்னதாக சமர்ப்பிக்கத் தவறின் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
20. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டே கேள்வி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
21. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது 024-2030200 எனும் தொலைபேசி இலக்கத்தினை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்

**திருமதி சோதிநாயகி மணிவண்ணன்,**
**செயலாளர்.**
**நெடுங்கேணி.**

(CR/43449) J-1

## 174 வீடுகளில் டெங்கு தரிசிப்பு

நீர்வேலி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற திடீர் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது 174 வீடுகள் சோதனையிடப்பட்டன. பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.உமாபாலன் தலைமையிலான சுகாதாரப்பிரிவினர் ஜே/267, ஜே/268, ஜே/269, ஜே/270 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இந்தச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்தச் சோதனையின் போது போதிய சுகாதார வசதிகள் இன்றிக் காணப்பட்ட 42 குடியிருப்புகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதோடு, நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட 4 குடியிருப்புகளுக்கு சிவப்பு அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டன.
(ச-45-17)

## சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.22
கைதடி சிறுவர் பூங்காவின் சிறுவர் தின நிகழ்வு கா.நிதுஸ்கா தலைமையில் கைதடி சிறுவர் பூங்கா வளாகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நடைபெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிருபராணி அமிர்தலிங்கம், சிறப்புவிருந்தினர்களாக கைதடி வடக்கு கிராம அலுவலர் ந.தனபாலசிங்கம், கைதடி கிழக்கு கிராம அலுவலர் திருமதி நியூறிஷா தினேஸ், கைதடி மத்தி கிராம அலுவலர் கி.சதீஸ், கைதடி தெற்கு கிராம அலுவலர் திருமதி பவித்திரா தர்மதுரை, கைதடி தென்கிழக்கு கிராம அலுவலர் திருமதி பானுஷா தவேஸ்வரன், கைதடி மேற்கு கிராம அலுவலர் ஜெ.தர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45-159)

## மீன்பிடிப் படகில் தீ

கொழும்பு, ஒக்.22
குடாவெல்ல மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகில் ஏற்பட்ட தீயால், அருகில் இருந்த 3 மீன்பிடிப் படகுகள் சேதமடைந்துள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுக்காலை நடந்துள்ளது.
எரிவாயு கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்காலை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

## வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.22
நல்லூர் பிரதேசசபை நூலகங்களின் தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா நல்லூர்ப் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நல்லூர்ப் பிரதேச சபையின் செயலாளர் யு. ஜெலீபன் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனையின் உளநல மருத்துவ நிபுணர் சி.சிவதாஸ் பிரதம விருந்தினராகவும், யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பெ.வசந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றத் தேர்தல் - 2024
சனநாயக தமிழரசு கூட்டமைப்பு
X 2
சுயேட்சை குழு - 14
மாற்றத்தின் விதை மாம்பழம்

ஈஸ்வரபாதம் சரவணபவன்

# சமூக ஊடகங்கள் மீது கழுகுப்பார்வை

## விதிமீறினால் 3 ஆண்டுகள் சிறை!

**கொழும்பு, ஒக். 22**

**பொதுத்தேர்தல் தொடர்பாக சமூகஊடகங்களில் தரமற்ற அல்லது போலியான ஆய்வு அறிக்கைகள், கருத்துக் கணிப்புகள் போன்ற தகவல்களை வெளியிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.கே.ரத்நாயக்க தெரிவிக்கையில்,
இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்டப்பிரிவு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, தேர்தல் சட்டத்தை மீறியமை கண்டறியப்பட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
நபர் ஒருவர் குற்றவாளியாக உறுதி செய்யப்பட்டால் ஒரு இலட்சம் ரூபா அபராதம் அல்லது 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும்.
சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு தேர்தல் ஆணையத்தில் தனிப்பிரிவு நடைமுறைப்படுத்தப்படும். தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் தகவல்களை வழங்குவார்கள். அந்தத் தகவல்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க தேர்தல்கள் ஆணையத்தின் சமூக ஊடக ஒழுங்குமுறைக்குழு செயற்படுத்தப்பட்டுள்ளது.
சமூக ஊடகங்கள், விசேடமாக ரிக்ரொக் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவை தொடர்பில் தேர்தல் ஆணையம் அதிக கவனம் செலுத்தியுள்ளது - என்றார். (ச-இ)

# நகைக் கடைக்குள் பாய்ந்த மோ.சைக்கிள்



முல்லைதீவு , ஒக். 22
புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் வேகக் கட்டுப்பாட்டினை இழந்த மோட்டார்சைக்கிள் நகைக்கடை ஒன்றுக்குள் புகுந்து விபத்துக்குள்ளாகியுள் ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்துள்ளது.
மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் காயங்களுக்கு உள்ளானதுடன் நகைக்கடையும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. விபத்துத் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ச-22,19)

## அநுரவுக்கு...

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவை அந்தப் பதவியில் இருந்து நீக்காவிட்டால், ஜனாதிபதி அநுரவுக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ரவி செனவிரத்தன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டபோது, அந்த நியமனத்தில் உள்ள தவறைச் சுட்டிக்காட்டி இருந்தோம். பதவிகளுக்குத் தகுதியான நபர் நியமிக்கப்பட வேண்டும், அதனை இனங்காணும் ஆளுமை ஜனாதிபதிக்கு இருக்கவேண்டும்.
தகுதியற்ற நியமனத்தை வழங்கி ஜனாதிபதி தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளார். எனவே, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை பதவி நீக்கவேண்டும். எனவே, அதிகார முறைகேடு, அரசமைப்பு மீறல் சம்பந்தமாக நாட்டு மக்களிடம் ஜனாதிபதி மன்னிப்புக் கோரவேண்டும். அவ்வாறு இல்லையேல் அடுத்த நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவரப்படும் - என்றார். (அ-ஒ-44)



## மாவையிடம் புளொட் நலம் விசாரிப்பு

முல்லைத்தீவு , ஒக். 22
திடீர் சுகவீனமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசாவை புளொட் அமைப்பைச் சேர்ந்த மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்த்தகர் பிருந்தாவன் மற்றும் சாவகச்சேரி நகர சபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர், பிரதேச சபை உப தவிசாளர் செ.மயூரன் ஆகியோர் நேரில் சென்று நலம் விசாரித்தனர். (ச-27)

# புதிய வரி விதிப்புகள் நிதியமைச்சு மறுப்பு

5 வகையான பொருள்களுக்குப் புதிய விசேட வர்த்தகப் பண்ட வரிகளை அரசாங்கம் விதித்துள்ளதாக வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது என நிதியமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. வரி நீடிப்பு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நீட்டிக்கப்பட்ட வரி விகிதங்கள் டிசெம்பர் 31வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அரசாங்கத்தினால் புதிதாக வரி விதிப்பு எதுவும் மேற்கொள்ளவில்லை. இறக்குமதி செய்யப்படும் பருப்புக்கு 25 சதவீத மானிய வரி அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டு மீன்பிடித் தொழிலையும், பழவிளைச் சலைப் பாதுகாக்கும் நோக்கில், அந்நியச் செலாவணியைக் கருத்தில் கொண்டு ஏனைய 4 பொருள்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட வரி விதிப்புகள் அதேபோன்று நீடிக்கப்பட் டுள்ளதாகவும் நிதியமைச்சு அறிவித்துள்ளது. (ச)

## ஈஸ்டர் தாக்குதல்...

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை வெளியிடப்படாமல் உள்ள இரு ஜனாதிபதி ஆணைக்குழுக்களினதும் அறிக்கைகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெளியிட வேண்டும் என்று தெரிவித்திருந்த கம்மன்பில, அரசாங்கத்துக்கு நேற்றுக் காலை வரை கால அவகாசத்தையும் கொடுத்திருந்தார்.
இந்த அறிக்கைகளை அரசாங்கம் வெளியிடாவிட்டால், தான் அவற்றை வெளியிடப்போவதாகவும் கம்மன்பில கூறியிருந்தார். இதைத் தொடர்ந்து நேற்று விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி அந்த அறிக்கைகளில் ஒன்றை கம்மன்பில வெளியிட்டுள்ளார். அடுத்த அறிக்கை ஒக்ரோபர் 28 ஆம் திகதி வெளியிடப்படும் எனவும் கம்மன்பில தெரிவித்துள்ளார்.
இதன்படி, அல்விஸ் ஆணைக்குழு அறிக்கையே நேற்று வெளியிடப்பட்டது. இமாம் ஆணைக்குழு அறிக்கை அடுத்தவாரம் வெளியிடப்படவுள்ளது.
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை பதவி நீக்கம் செய்துவிட்டு, நாட்டு மக்களிடம் ஜனாதிபதி மன்னிப்புக் கோர வேண்டும். அவ்வாறு இல்லையேல் அடுத்த நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவரப்படும் என்றும் உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ-ஒ-44)

# வாகனவரி : புதிய உத்தரவு!

கொழும்பு, ஒக். 22
வாகன வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வது குறித்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. வாகன வருமான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை மாகாணங்களுக்கிடையிலான தொடர்பின்மை எனவும், அது நடைமுறைப்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் மிகவும் அத்தியாவசியமான மாகாணமான மேல் மாகாணத்துக்கு இது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் வாகன உரிமையாளருக்குச் சொந்தமான வாகனம் இதற்கு முன்னர் வேறு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால், இந்த மாகாணத்தில் வருமான அனுமதிப் பத்திரம் பெறும் நேரத்தையும், உழைப்பையும், பணத்தையும் செலவழிக்கும் மிகவும் கடினமான பணியாக உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இந்த சிரமம் தொடர்பில் கவனம் செலுத்தி மேல் மாகாணத்தை ஏனைய மாகாணங்களுடன் இணைப்பதற்குத் தேவையான நடவடிக்கை, அறிவுறுத்தல்களை உரிய திணைக்களங்களுக்கு வழங்குமாறு மேல்மாகாண ஆளுநருக்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமானசேவைகள் அமைச்சர் விஜித ஹேரத் பணிப்புரை விடுத்துள்ளார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கையறு நிலைக்கெதிராக ஓங்கி குரலெழுப்பவேண்டும்

## ரவிகரன் வலியுறுத்து

கிளிநொச்சி, ஒக். 22
எங்களைக் காத்தவர்கள் இன்று மௌனிக்கப்பட்ட நிலையில் மக்களாகிய நாங்கள் எமது உரிமைக்காகப் போராடவேண்டிய காலத்தினுள் நாம் தள்ளப்பட்டுள்ளோம். இலங்கைத் தமிழன் ஆண்ட பூமி. எமக்கான தீர்வைப் பெறுவதற்கு எமது குரல்கள் தொடர்ச்சியாக ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும்.

– இவ்வாறு வடமாகாணசபை முன்னாள் உறுப்பினரும் வன்னிமாவட்ட தமிழரசுக்கட்சியின் வேட்பாளருமான து.ரவிகரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வன்னிமாவட்ட வேட்பாளர்களின் அறிமுகநிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

அபிவிருத்தியோடு எமது தீர்வைநோக்கிப் பயணிப்பதே எமது இலக்கு. ஆனால் எமது நிலம் இருந்தால் மாத்திரமே அந்த அபிவிருத்தியை செய்யமுடியும்.

எமது நிலம் எமது உரிமை. அது இல்லாவிட்டால் ஒன்றுமே இல்லை. இலங்கைத் தமிழன் ஆண்ட பூமி. எனவே எமக்கான தீர்வை நாம் பெற்றுக்கொள்ள எமது குரல்கள் தொடர்ச்சியாக ஒலித்துக்கொண்டிக்க வேண்டும் – என்றார். (ச–110,18)

### முதலிடத்தில் ஹொங்கொங்

பொருளாதார சுதந்திரம் கொண்ட நாடுகளின் பட்டியலில், சிங்கப்பூரை பின்தள்ளி ஹொங்கொங் முதலிடம் பிடித்துள்ளது. சுவிற்சர்லாந்து, நியூஸிலாந்து, அமெரிக்கா ஆகியன அடுத்தடுத்த இடத்தில் உள்ளன. (ம)

## காணி விற்பனைக்கு உண்டு

**கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு அண்மையாக கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு பின்புறமாக 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- நல்ல குடியிருப்புச் சூழல்
- நன்னீர் கிணறு
- இருபாலை கோண்டாவில் வீதி 100M

உரிமையாளர் தொடர்புகளுக்கு :

**077 993 4113, 077 349 9465**

(CR/43447) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 08 . 1947



மறைவு
20 . 10 . 2024

### அமரர் பாலகிருஷ்ணன் புனிதவதி

புங்குடுதீவை பூர்வீகமாகவும் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் ஊரெழு, கொழும்பு, கனடா ஆகிய இடங்களை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலகிருஷ்ணன் புனிதவதி அவர்கள் நேற்றுமுன்தினம் (20.10.2024) ஞாயிற்றுக்கிழமை யாழ் கொட்டடியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேசு–முத்தம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ரவீந்திரராஜா (லண்டன்), ரவீந்திரராணி, பிரதீபா (கனடா), ரவிராஜ் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் தர்மவதியின் அன்புச் சகோதரியும், அருந்ததி (லண்டன்), பீற்றர்அன்ரனி, பாரதிதாசன் (கனடா), சிந்துஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சாய்உமேஷன், சாய்சரவணன், சாய்சரண், பிருத்திகா, சுருதிகா, காயத்திரி, கிருஷா ஆகியோரின் அம்மம்மாவும் அபிராமி, ஹரிகிருஷ்ணா, லதீஸ், கிரிஷ், தியானிகா ஆகியோரின் அப்பம்மாவும் தர்மிகா, அனன்யா ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2024) புதன்கிமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
076 667 5781-ரவீந்திரராணி (மகள்)
074 284 7858-ரவிராஜ் (மகன்)

(CS 1673) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 03 . 1956



மறைவு
19 . 10 . 2024

### அமரர் பாலசிங்கம் கனகேஸ்வரி (கோசலா)

சரவணையை பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் கனகேஸ்வரி (கோசலா), அவர்கள் கடந்த 19.10.2024 சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (சின்னத்துரை)–பார்வதி தம்பதியின் அன்பு மகளும் பொன்னையா–மாணிக்கம் தம்பதியின் அருமை மருமகளும் பொன்னையா பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் அனிதா, துவாரகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுதர்சனின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற குணலட்சுமி, யோகலிங்கம் மற்றும் புஸ்பராசா, பேரின்பராணி, நகுலேஸ்வரன், தவராசா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற இராசலட்சுமி, இராசகுமாரி மற்றும் இரத்தினசிங்கம், சரஸ்வதி, இராசலிங்கம், கந்தசாமி, ஜெகதீஸ்வரி, துளசிதாசன், சந்திரவதனா, பாமா, வினோதா ஆகியோரின் மைத்துனியும் அஞ்சனா, பிரணவராம், பிரஜித்ராம் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
077 370 8236

(CS 1672) V-1

## மரண அறிவித்தல்



### திருமதி பொனிபபாஸ் மெற்றிலம்மா

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொனிப்பாஸ் மெற்றிலம்மா நேற்று (21.10.2024) திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான சலமோன்–சிசிலியா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பர்னாந்து–அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொனிப்பாஸ் (இராசையா, முன்னாள் விற்பனை திணைக்கள சாரதி) அவர்களின் அன்பு மனைவியும் றொபேட் ரவீந்திரகுமார் (யாழ் செயலகம், ஓய்வு பெற்ற பணியாளர்), ஜெறாட்கனியூட் (அரச முதியோர் இல்லம், கைதடி), நொபேட் அலெக்ஸ் (யாழ்/பலநோக்கு கூட்டுறவு சங்க பணியாளர்), அருட்சகோதரி சுகிர்த செல்வி (திருக்குடும்ப கன்னியர் மடம் நெடுந்தீவு), றுமிநா (ஆசிரியை, பாசையூர் சென்.அன்ரனீஸ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு தாயாரும் பாலதேவி, றொசற்றா, வசந்தமேரி, றெஜிமோகனதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற அன்ரன் மற்றும் ஜோச் (ராசா), டொன் பொஸ்கோ ஆகியோரின் அன்புச்சகோதரியும் லீலா, இந்திராணி, லில்லி ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வின் (வீரு லொறிற்ராஸ்), லிடியா ரிஷானா (ஆசிரியை மன்/மூன்றாம்பிட்டி அ.த.க.பாடசாலை) சத்தியராஜ் (உதவி முகாமையாளர் HNB Finance), கலிஸரஸ் (மதிப்பீட்டு பொறியியலாளர்), சாருயன், மகிழினி, சிபோன், ரிக்ஷிகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.10.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கொழும்புத்துறை சென் மேரீஸ் 1 ஆம் ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருபலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CR 43452) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர்...

கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அல்விஸ் ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிட்டு உரையாற்றும்போதே கம்மன்பில இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதன்போது கம்மன்பில மேலும் தெரிவித்ததாவது:-

கத்தோலிக்க தேவாலயங்கள் உள்ளிட்ட இடங்களை இலக்கு வைத்து தற்கொலை குண்டுத் தாக்கல் நடத்தப்படவுள்ளது என வெளிநாட்டுப் புலனாய்வு பிரிவு எச்சரித்துள்ளது என்று அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானியால், குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூத்த பிரதி பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயலாளராகப் பதவி வகிக்கும் ரவி செனவிரத்னவே அப்போது அந்தப் பதவியில் பணியாற்றியுள்ளார். தாக்குதல் நடத்தும் பயங்கரவாதிகளின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், தொலைபேசி இலக்கங்கள், முகவரிகள், நடமாடும் இடங்கள் உள்ளிட்ட தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு செயலாளர் அறிக்கையில் ரவி செனவிரத்னவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 9 ஆம் திகதி தகவல்கள் அடங்கிய அறிக்கை வந்தபோது தான் வெளிநாடு சென்றிருந்ததாகவும், மீண்டும் நாடு திரும்பிய பின்னர் 16 ஆம் திகதியே அறிக்கையைப் பார்த்தாகவும் ரவி செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

பதில் மூத்த பொலிஸ்மா அதிபர் ஒருவரை பணிக்கு அமர்த்திவிட்டே அவர் வெளிநாடு சென்றிருந்தார். இரகசியம் என வரும் கடிதத்தை திறக்கவேண்டாம், யாருக்கும் அனுப்ப வேண்டாம் என ரவி செனவிரத்ன ஆலோசனை வழங்கியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு ரவி செனவிரத்ன வழங்கியுள்ள சட்டவிரோத ஆலோசனையால், அந்த அறிக்கையை பதிலுக்கு இருந்தவர் பார்க்கவில்லை. மேசையிலேயே இருந்துள்ளது.

ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதியே ரவி செனவிரத்ன இந்த அறிக்கையைப் பார்த்துள்ளார். விசாரணை நடத்தி மே மாதம் முதலாம் திகதி அறிக்கை வழங்குமாறு அவர் குறிப்பொன்றை எழுதியுள்ளார்.

எனினும், குற்றப் புலனாய்வுப்பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாகாமுல்ல என்பவருக்கு அதனை அனுப்புவதற்கு 19 ஆம் திகதியே அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 ஆம் திகதி தாக்குதல் நடத்தப்படும்வரை பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாகாமுல்லவுக்கு கடிதம் கிட்டவில்லை. 22 ஆம் திகதியே சென்றுள்ளது.

அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய கடிதமொன்று 12 நாட்கள் இருந்துள்ளது. அதி இரகசியம் எனக் குறிப்பிட்டிருந்த கடிதம் தொடர்பில் நாகாமுல்லயை நேரில் அழைத்து ஏன் கடிதத்தைக் கையளிக்கவில்லை? புலனாய்வுப் பிரிவின் அறிக்கை வாசிக்கப்பட்டதா என்ற சந்தேகமும் உள்ளது.

ரவி செனவிரத்னவின் கீழ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவும் இருந்துள்ளது. அவருக்கு ஸஹ்ரான் உள்ளிட்ட தரப்புகளைப் பற்றித் தெரியும். அவர் கடிதத்தை வாசித்திருந்தால் ஸஹ்ரான் குழுவை கைது செய்திருக்கலாம். குற்றப் புலனாய்வுப் பிரிவில் 12 நாட்கள் இந்த கடிதம் இருந்திருக்காமல், முறையாகப் பார்க்கப்பட்டிருந்தால் தாக்குதலைத் தடுத்திருக்கலாம். உயிரிழப்புகளைத் தடுத்திருக்கலாம்.

இப்படிப்பட்ட ரவி செனவிரத்னதான் தற்போது பொலிஸின் உயர் கதிரையில் (பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்) உள்ளார். எனவே, அவரின் கண்காணிப்பின்கீழ், புதிய விசாரணைகள் முறையாக நடைபெறுமா? என்ற சந்தேகம் உள்ளது - என்றார். (அ-ம-44)

## உண்மைக்...

அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும். 2019ஆம் ஆண்டு தாக்குதலில் அதிகாரத்தை பிடிக்க இனவாதத்தை தூண்டியவர்கள் 5 வருடங்களின் பின்னர் மீண்டும் கோமா நிலையில் இருந்து எழுந்துள்ளனர். இப்போது அந்த அறிக்கை, இந்த அறிக்கையை வெளியிடுமாறு கூறுகின்றனர். அந்த அறிக்கைகள் இரண்டும் ரணில் விக்கிரமசிங்கவின் அறிக்கையே. ஒன்று சனல் 4 விவகாரம் தொடர்பானது மற்றையது உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதுகாப்பு தரப்பினரால் ஏதேனும் தவறு நடந்துள்ளதா என்று ஆராய்வதற்கான அறிக்கையாகும். அவை விசாரணை அறிக்கையல்ல. அந்த அறிக்கைகள் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டவை. அந்த அறிக்கைகள்நான்பதவிக்குவந்தபின்னர் சட்டமா அதிபருக்கும், பாதுகாப்பு செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவை இரகசிய அறிக்கைகள் அல்ல.

ரணில் விக்கிரமசிங்கவின் சில குழுக்கள் இந்த விசாரணைகளை உண்மை பக்கமின்றி மூடி மறைக்கும் நோக்கத்திலேயே அமைக்கப்பட்டன. எவ்வாறாயினும் நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் முறையான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கூறினோம். அந்த விசாரணைக்கு பயந்து, உண்மைகளை மாற்றியமைக்கவும், வேறு சமூக நிலைப்பாடுகளை உருவாக்கவும் தவறான நோக்கத்துக்காக கோமாவில் இருந்தவர்கள் எழுந்துள்ளனர்.

குறித்த நபரின் நோக்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான குற்றவாளியை கண்டறிவது அல்ல. உண்மையான குற்றவாளியை மறைப்பதற்காக அவர்களின் கூலி ஒப்பந்தத்தையே செய்கின்றனர். இதற்கு நாம் சிக்கமாட்டோம். நியாயமான விசாரணைகளை நடத்தி உண்மைகளை வெளிக்கொண்டு வருவோம். எங்களுக்கு எவரையும் காக்க வேண்டியதில்லை.

இந்த விளையாட்டை ரணில் விக்கிரமசிங்கவிடம் காட்டலாம். நாங்கள் கவிழ்ந்த வாளியில் சிக்கிக்கொள்வதில்லை. விசாரணை முறையாக நடக்கும் போது உண்மைகளை மூடி மறைப்பதற்காக சூழ்ச்சியாளர்கள் வெளியில் வந்துள்ளனர். இதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை - என்றார். (அ-ஒ-இ)

## அநுர...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி கடன் உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும், எமக்குக் கடன் வழங்கிய நாடுகளுடன் கலந்துரையாடி கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்திருந்தது. அந்த நடவடிக்கைகள் அனைத்தும் கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் இருதரப்பு இணக்கப்பாடுகளுடன் பூரணப்படுத்தப்பட்டன.

ஆனால், இலங்கை அரசாங்கம் நாணய நிதியம் உள்ளிட்ட தரப்பினருடன் செய்த ஒப்பந்தங்களை மாற்றியமைப்பதாகக் கூறிக்கொண்டு ஆட்சிபீடம் ஏறிய அநுர குமார தரப்பினர், அந்த ஒப்பந்தங்களை எந்த மாற்றமும் இல்லாமல் அவ்வாறே தொடர்வதாக சர்வதேச நாணய நிதியத்திடம் கூறியுள்ளனர். ஆனால், ஒப்பந்தங்களை மாற்றியமைக்க தமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தருமாறு மக்கள் முன்னிலையில் கூறுகின்றனர். இவ்வாறாக இங்கொன்றும் அங்கொன்றுமாக முரணான கருத்துகளையே அநுர அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

புதிய அரசாங்கத்திடமோ அல்லது ஜனாதிபதி அநுரவிடமோ தெளிவான சிந்தனையும் பதிலும் இல்லை என்பதையே இந்தக் கருத்துகள் வெளிப்படுத்துகின்றன. அதேநேரம் புதிய ஜனாதிபதி ஒருவர் பதவி ஏற்றால் ஆரம்பமாக அவர் தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்கஉரையை நாடாளுமன்றத்திலோ அல்லது மக்கள் முன்னிலையிலோ முன்வைக்கவேண்டும். ஆனால் அநுர குமார திஸாநாயக்க இதுவரை அவ்வாறு எதனையும் தெரிவிப்பதைக் காணவில்லை - என்றார். (அ-ம)

## நாடாளுமன்ற...

இந்தச் செயலமர்வில் தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டு விநியோகிக்கும் கடமையில் ஈடுபடவுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். நாடாளுமன்றத் தேர்தலில் தபால்மூல வாக்களிப்புக் கடமைகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி. அமல்ராஜ் விளக்கமளித்தார்.

தபால்மூலமான வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுகள் மற்றும் உரிய ஆவணங்களைப்பொதியிட்டுவிநியோகிக்கும் கடமை ஒரு குழுக் கடமையாகும் என்பதால் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்கள் வினைத்திறனாகச் செயற்பட்டு ஒத்துழைப்பு நல்குமாறு செயலமர்வில் பங்கேற்றுத் தலைமை உரையாற்றிய மாவட்டப் பதில் செயலர் பிரதீபன் கேட்டுக்கொண்டார். (அ-ஒ-66)

## யாழ்...

த. சத்தியமூர்த்தி தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவகலாநிதி சி. யமுனானந்தா, மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்கள், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21 ஆம், 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய அமைதிப் படையினர் கண்மூடித்தனமான முறையில் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில், மருத்துவமனையில் கடமையிலிருந்த மூன்று மருத்துவர்கள், இரண்டு தாதியர்கள், மேற்பார்வையாளர் உள்ளிட்ட 21 பேரும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 47 நோயாளர்களும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## இறைச்சியாக்கியோர்...

கும்பலை புதுக்குடியிருப்புப் பொலிஸார் கடந்த 19 ஆம் திகதி கைது செய்துள்ளனர். மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழங்கப்பட்ட சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுதியான மாட்டைத் திருடி இறைச்சிக்காக விற்பனைக்குத் தயாரான நிலையில் வைத்திருந்த சந்தேகத்தில் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் இருவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றும் சிவில் பாதுகாப்புதிணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-19)

## தேர்தல்...

செய்யப்பட்டுள்ளது. சிவில் செயற்பாட்டாளரும் 'நாம் இலங்கை தேசிய அமைப்பின்' அழைப்பாளருமான எச்.எம். பிரியந்த ஹேரத்தால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் 10ஆவது பிரிவின்படி, வேட்புமனு தாக்கல்செய்வதற்கான திகதி ஒக்ரோபர் 4 முதல் ஒக்ரோபர் 11ஆம் திகதி வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல்கள் சட்டத்தின்படி, ஐந்து வாரங்களுக்குக் குறையாமலும், வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்த நாளிலிருந்து ஏழு வாரங்களுக்கு மிகையாகாமலும் வாக்குப்பதிவுக்கான திகதி நிர்ணயிக்கப்பட வேண்டும். அதன்படி, வேட்புமனு ஏற்கும் பணி முடிவடையும் ஒக்ரோபர் 11ஆம் திகதி முதல் ஐந்து வார கால அவகாசம் நவம்பர் 15ஆம் திகதியும், ஏழு வார கால அவகாசம் நவம்பர் 29ஆம் திகதியும் நிறைவடையும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நவம்பர் 14ஆம் திகதி, அந்த சட்டக் காலப்பகுதியில் உள்ளடக்கப்படாததால், அன்றைய தினம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது சட்டத்துக்கு முரணானது என மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே சம்பந்தப்பட்ட விடயத்தை சரிசெய்வதற்கு ஏற்ற உத்தரவாக இருந்தால், உயர் நீதிமன்றம் அத்தகைய உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு மனுதாரர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-ஒ-இ)

## 67 பேர்...

வாங்கும் போதுமே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பொலிஸார், கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் அடங்குவதாகவும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-ஒ-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆழமான குறைபாடுகளுடன் அமெரிக்க புலனாய்வு சேவை

## விசாரணை மேற்கொண்ட குழு எச்சரிக்கை

**நியூயோர்க், ஒக்.22**
**அமெரிக்க புலனாய்வுச் சேவையில் ஆழமான குறைபாடுகள் உள்ளன. அவை விரைவாக தீர்க்கப்படவேண்டும். இல்லையெனில் டொனால்ட் ட்ரம்பின் பேரணியில் நடந்ததைப் போன்ற கொலை முயற்சிகள் மீண்டும் நிகழலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி பென்சில்வேனியாவின் பட்லரில் நடந்த ட்ரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட சுயாதீனக் குழு, கடந்த வியாழனன்று தமது அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பென்சில்வேனியாவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் டிரம்ப் காயமடைந்துடன், பேரணியில் பங்கேற்றவர் ஒருவர் உயிரிழந்திருந்தார். அதையடுத்து பாதுகாப்புத் துறை செயலர் அலெஜான்ட்ரோ மேயர்காஸ், முன்னாள் பாதுகாப்பு மற்றும் சட்டத்துறை அதிகாரிகளைக் கொண்ட விசாரணைக் குழுவை நியமித்திருந்தார்.

விசாரணைகளை மேற்கொண்ட இந்தக் குழு 52 பக்கம் கொண்ட விசாரணை அறிக்கையைத் தற்போது வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், அமெரிக்க புலனாய்வு துறையில் அடிப்படை சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும். அதன் தலைமையை மாற்றியமைக்கவேண்டும். இல்லாவிட்டால் இவ்வாறான தாக்குதல் மீண்டும் நடத்தப்படலாம். அமெரிக்க புலனாய்வுச் சேவை ஏற்கனவே அதன் தோல்விகளை ஒப்புக்கொண்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-இ)

# நெத்தன்யாகுவின் இல்லத்தை குறிவைத்து 'ட்ரோன்' தாக்குதல்

டெல் அபிவ், ஒக்.22
இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவின் குடியிருப்பு அமைந்துள்ள செசாரியா நகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. லெபனானில் இருந்து ஏவப்பட்ட ட்ரோன்களே செசாரியா நகர் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

பலஸ்தீனம் மீதும் லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் இரு நாடுகளில் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகளின் தலைவர்கள் அடுத்தடுத்து கொல்லப்பட்டுள்ளனர். அதையடுத்து ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலின் உட்புற நகரங்கள் மீது ட்ரோன் தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

நெத்தன்யாகு இல்லம் அமைத்துள்ள இடத்தின் அருகே உள்ள கட்டடத்தின் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் உயிரிழப்பு ஏற்படவில்லை என்று இஸ்ரேல் பாதுகாப்புத்துறை உறுதிப்படுத்தியுள்ளது. ஆயினும் தாக்குதல் நடத்தப்பட்டபோது நெத்தன்யாகு தனது இல்லத்தில் இருந்தாரா என்பதை இஸ்ரேல் பாதுகாப்புத்துறை உறுதிப்படுத்த மறுத்துவிட்டது. அதேவேளை, டெல் அவிவ் நகருக்கு வடக்கே உள்ள உலா கிலாட் பகுதியில் இரு ட்ரோன்கள் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன என்றும் இஸ்ரேல் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது. (எ-இ)

# அமெரிக்காவில் சூடு; மூன்று பேர் உயிரிழப்பு

நியூயோர்க், ஒக்.22
அமெரிக்காவில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் திடீரென மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் மிசிசிபி மாகாணம் ஹொல்மெஸ் நகரில் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் அந்தப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை சம்பியனானது. அதன்பின்னர் நடந்த வெற்றிக் கொண்டாட்டங்களில் இரு குழுக்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அங்கு திடீரென மேற்கொள்ளபட்ட துப்பாக்கி பிரயோகத்தில் மூவர் உயிரிழந்ததுடன் மேலும் 8 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் அமெரிக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-இ)

# காஸா மீது தாக்குதல் 75 பேர் உடல் சிதறி பலி

ஜெருசலேம், ஒக்.21
காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்ட வான்தாக்குதல்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 75 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. இந்தத் தாக்குதல்களில் பலர் காயமடைந்துள்ளனர் என்றும், பலர் இடிபாடுகளிடையே சிக்கியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

பொதுமக்கள் அதிகளவில் வசிக்கும் பகுதி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 75 பேர் உயிரிழந்தனர் என ஹமாஸின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வபா எனப்படும் பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்பு முற்றாக அழிக்கப்பட்டுள்ளது என பலஸ்தீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அதேவேளை, இந்த உயிரிழப்புகள் தொடர்பான விவரங்கள் ஆராயப்படுகின்றன என்று தெரிவித்துள்ள இஸ்ரேல் எனினும் ஹமாஸ் வெளியிட்டுள்ள தற்போதைய புள்ளிவிவரங்கள் மிகைப்படுத்தப்பட்டவை எனத் தெரிவித்துள்ளது. (எ-இ)



# தாக்குதல் முயற்சி மாபெரும் தவறு

## எச்சரிக்கிறார் நெத்தன்யாகு

ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலியப் பிரதமர் நெத்தன்யாகுவின் குடியிருப்புக்கு அருகே ட்ரோன் தாக்குதலை நடத்தியிருக்கும் நிலையில், மாபெரும் தவறைச் செய்துவிட்டீர்கள் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் பிரதமர் நெத்தன்யாகு.

என்னையும் என் மனைவியையும் படுகொலை செய்ய ஹிஸ்புல்லா எடுத்த முயற்சி மிகப் பெரிய தவறு. இது எதிரிகளுக்கு எதிரான எமது நியாயமான போரைத் தொடர்வதைத் தடுக்காது. இஸ்ரேல் மக்களுக்குத் தீங்கு விளைவிக்க முயற்சிக்கும் எவரும் பெரும் விலையைக் கொடுக்கவேண்டியிருக்கும். பயங்கரவாதிகளையும், அவர்களை அனுப்புபவர்களையும் நாங்கள் அடிப்போம். எமது போர் நோக்கங்கள் அனைத்தையும் அடைவதில் இஸ்ரேல் உறுதியாக இருக்கின்றது என்று நெத்தன்யாகு தெரிவித்துள்ளார். (எ-இ)

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புகள்
இந்த வருடம் ஏடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
A/L
V2 Travels
0768226244

# பெய்ரூட்டை இலக்கு வைத்து இஸ்ரேல் கடும் தாக்குதல்

லண்டன், ஒக்.22
லெபனானின் தலைநகர் பெய்ரூட்டை அண்மித்த பகுதிகளில் நேற்றுமுன்தினம் 12க்கும் மேற்பட்ட தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குடியிருப்பாளர்களை வெளியேறுமாறு இஸ்ரேல் இராணுவம் எச்சரிக்கை விடுத்த சில நிமிடங்களில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. இந்தத் தாக்குதல்களால் ஏற்பட்ட உயிரிழப்புகள், சேதங்கள் தொடர்பான விவரங்கள் வெளியாகவில்லை.

இந்தத் தாக்குதலில் தொடர்மாடிக் கட்டடம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, ஹிஸ்புல்லா அமைப்பின் ஆயுதக் கிடங்குகள் மற்றும் தாஹியில் உள்ள ஹிஸ்புல்லாவின் உளவுத்துறை தலைமையகத்தின் கட்டளை மையம் என்பவற்றின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (எ-இ)



# இருளில் மூழ்கிய கியூபா

ஹவானா, ஒக்.22
கியூபாவின் மிகப் பெரிய மின் உற்பத்தி நிலையமான அன்டோனியோ குட்டோரஸ் மின் உற்பத்தியை நிறுத்தியுள்ளதால் நாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

கியூபாவில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவு காரணமாக மின் உற்பத்தி உட்பட அனைத்துச் சேவைகளும் கடந்த சில நாள்களாக பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாள்களாக அங்குள்ள சிறு மின் உற்பத்தி நிலையங்கள் படிப்படியாகத் தங்கள் இயக்கத்தை நிறுத்தியதால் மின் தடைகள் ஏற்பட்டிருந்தன. தற்போது அன்டோனியோ குட்டோரஸ் மின் உற்பத்தி நிலையமும் மின் உற்பத்தியை நிறுத்தியுள்ளதால் நாடு முழுவதும் மின் தடைப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

வீட்டுப் பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு பெண் ஒருவர் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
(CS/1671) J-1
077 073 5931

பணிப்பெண் தேவை
யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
(CS/56505) J-1
070 369 6037



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.